வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, நிகர சொத்து மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 47(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

வாழ்க்கைத் தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழகத்தின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையை நிதிக்கூற்றுக்களில் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக அதிகாரச் சட்டம் | |
| 18 ஆம் பிரிவு | ஆளுநர் சபைக் கூட்டத்தில் நிதி அமைச்சின் செயலாளர் அல்லது அவரால் பெயரிடப்படும் நபரொருவர் மற்றும் இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் தலைவர் ஆகியோர் அங்கத்துவம் வகிக்க வேண்டுமாயினும், மீளாய்வாண்டின்போது நடைபெற்ற 11 கூட்டங்களில் நிதி அமைச்சினால் பெயரிடப்பட்ட உத்தியோகத்தர் 09 கூட்டங்களிலும் இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகாரசபையின் தலைவர் 08 கூட்டங்களிலும் பங்குபற்றவில்லை. அதற்கமைய, பல்கலைக்கழகத்தின் நிதி நிர்வாகம் தொடர்பாக ஆளுநர் சபை மேற்கொண்ட தீர்மானங்களது பயனளிதன்மை தொடர்பாகக் கணக்காய்வில் திருப்தியடைய முடியவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 571ஆம் நிதிப்பிரமாணம் | 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய ரூபா 1,266,275 கூட்டுத் தொகையுடைய கோரிக்கையற்ற நூலக, ஆய்வுகூட, விடுதி வைப்புகளை வருமானத்தில் சேர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (இ) 2013 ஒக்டோபர் 24 ஆந் திகதிய நிதி, திட்டமிடல் அமைச்சின் 2013/2014 (ii) ஆம் இலக்க சுற்றறிக்கை | வெளிநாட்டுப் பயிற்சிகளை நிறைவேற்றும் சகல உத்தியோகத்தர்களும் பங்குபற்றிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான அறிக்கையை ஒரு மாதத்திற்குள் நிறுவனத் தலைவருக்கு சமர்ப்பிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டபோதும், 2013 தொடக்கம் வெளிநாடு சென்ற 21 உத்தியோகத்தர்களில் 18 பேர் அவ்வாறான அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிப்பெறுபேறுகளின் பிரகாரம், பல்கலைக்கழகத்தின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிப்பெறுபேறு ரூபா 214,709 மிகையாகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,054,300 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப்பெறுபேற்றில் ரூபா 3,269,009 அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. ஊழியர் கிரயம் ரூபா 16,552,372 அதிகரித்தும் நிபுணத்துவத் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான மானியம் ரூபா 7,147,326 குறைந்தும் ஆண்டிற்கான மீண்டு வரும் மானியம் ரூபா 27,787,500 அதிகரித்தும் இருந்தமையே மேற்படி அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப்பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2012 ஆம் ஆண்டின் பற்றாக்குறை 2013 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க மிகைக்குள்ளாகி 2014 ஆம் ஆண்டளவில் மிகை குறைவடைந்திருந்ததுடன் 2015 ஆம் ஆண்டினது பற்றாக்குறை மீளாய்வாண்டில் மீண்டும் மிகையாக உருவாகியிருந்தது. எவ்வாறாயினும், ஊழியர்களின் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றை நிதிப் பெறுபேற்றில் மீண்டும் சீராக்கல் செய்யும்போது 2012 ஆம் ஆண்டினது ரூபா 139,569,752 பங்களிப்பானது மீளாய்வாண்டில் ரூபா 216,650,852 ஆகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வித்துறையில் டிப்ளோமா தகுதி பெற்றவர்களுக்கு உயர் கல்விக்கான சந்தர்ப்பத்தை வழங்குதல் வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் பிரதான நோக்கமாகும். அவ்வாறே, தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்விக்கான பாடவிதானத்தை அபிவிருத்தி செய்வதற்குப் பங்களித்தல், பல்கலைக்கழகத்தில் சேர்த்துக் கொள்வதற்காக ஏற்றுக்கொள்ளக் கூடிய தகைமைகளைப் பெற்றுள்ள மத்திய மட்டத்திலான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்காக கல்விக் கற்கை நெறிகளை வழங்குதல், தேசிய தொழில்சார் தகைமைகளைப் பெற்றவர்கள் தமது நிபுணத்துவத்தை உயர்வடையச் செய்வதற்குத் தேவையான கற்கை நெறிகளைச் சமர்ப்பித்தல் மற்றும் தொடர் தொழில்சார் அபிவிருத்திக்காக விரிவான கற்கை நெறிகளைச் சமர்ப்பித்தல் என்பனவும் நோக்கங்களாகும். அந் நோக்கங்களை ஈடேற்றுவதற்குரிய கற்கை நெறியின் பொருட்டு தகுதிச் சான்றிதழைப் பெறுவது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 21(1) ஆம் பிரிவின் பிரகாரம் உட்சேர்த்தல், ஒத்தியல்பு மதிப்பீடு செய்தல் மற்றும் தகுதிச் சான்றளித்தல் என்பவற்றிற்கான மன்றம் அமைக்கப்பட்டிருந்ததுடன், அம்மன்றத்தின் 2010 மே 18 ஆந்திய தீர்மானத்தின் பிரகாரம் பல்கலைக்கழகம் நடாத்தும் பொறியியல் பட்டப் படிப்புக் கற்கை நெறிக்கு இலங்கை பொறியில் நிறுவகத்தினதும் ஏனைய கற்கை நெறிகளுக்கு மொறட்டுவை, பேராதனை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களதும் ஒத்தியல்பு மதிப்பீட்டைப் பெறுவதற்கும் அதனைவிட வெளிநாடுகளில்

உள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைகழகங்களதும் ஒத்தியல்பு மதிப்பீட்டைப் பெறுவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும், பல்கலைக்கழகத்தை நிறுவி 07 ஆண்டுகளாகியும் எதிர்பார்த்தவாறு பட்டப் படிப்பு கற்கைக் நெறிகளுக்கான ஒத்தியல்பு மதிப்பீட்டைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ii) நிபுணத்துவத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (SSDP) கீழ் பல்கலைக்கழகம் நடாத்தும் கற்கை நெறிகளுக்கு பொறியியல் நிறுவகம் மற்றும் உள்ளூர், வெளிநாட்டு தொழில்சார் நிறுவனங்களது ஒத்தியல்பு மதிப்பீட்டைப் பெறுவதற்கு 2015,2016 ஆம் ஆண்டுகளின்போது முறையே ரூபா 50,000, 500,000 என நிதியேற்பாடு பெறப்பட்டபோதும், கணக்காய்வுத் தினமான 2017 மார்ச் 02 ஆந் திகதியளவிலும் பல்கலைக்கழகம் ஒத்தியல்பு மதிப்பீட்டைப் பெறுவதற்குத் தவறியிருந்தது.

(iii) 2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க வாழ்க்கைத் தொழில்சார் பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 21(ஆ)(ii) ஆம் பிரிவின் பிரகாரம், பல்கலைக்கழகத்தில் உட்சேர்த்தல், ஒத்தியல்பு மதிப்பீடளித்தல், தகுதிச் சான்றிதழை வழங்குதல் போன்றவற்றிக்கான மன்றத்திற்கு இலங்கை பொறியியல் நிறுவனம் அல்லது இலங்கை கூட்டிணைத்த பொறியியலாளர் நிறுவனம் என்பவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட ‘‘நியமன அங்கத்தவர்’’களுக்கிடையே குறைந்தது ஒருவராவது உள்ளடங்குமாறு ஆளுநர் சபையால் பெயரிடப்படும் 02 ஆளுநர் சபை அங்கத்தவர்கள் உள்ளடங்கியிருத்தல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டில் நடைபெற்ற தகுதிச் சான்றிதழ் மன்றக் கூட்டத்தில் ஆளுநர் சபையின் ஒரு பிரதிநிதி மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தார்.

**(ஆ) பட்டப்படிப்புக் கற்கை நெறிகளை நடாத்துதல்**

(i) பட்டப்படிப்புக் கற்கை நெறிகளுக்கு மாணாக்கரை ஆட்சேர்த்தல் 2010 ஆம் ஆண்டில் ஆரம்பமாகியது. 2012 ஆம் ஆண்டின்போது முழு நேரக் கற்கை நெறிகளுக்கு முறையே 07 மற்றும் 08 மாணாக்கர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டளவில் அதில் 05 கற்கை நெறிகளுக்கு மாத்திரமே ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன், ஏனைய கற்கை நெறிகளுக்கு மாணாக்கர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

(ii) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் முழு நேரக் கற்கை நெறிகளுக்குப் புறம்பாக, வார இறுதிக் கற்கை நெறிகளுக்கும் (அரை நேர) மாணாக்கர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டளவில் 05 முழு நேரக் கற்கை நெறிகளின் பொருட்டு 122 மாணாக்கரும் 13 வார இறுதிக் கற்கை நெறிகளுக்கு 462 மாணாக்கரும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் முழு நேரக் கற்கை நெறிகளுக்கான புதிய கற்கை நெறிகளை அறிமுகம் செய்து வளங்களை அதி கூடிய அளவில் பயன்படுத்தக்கூடியவாறு மாணாக்கரைச் சேர்த்துக் கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கவில்லை.

(iii) ஒவ்வொரு கற்கை நெறிக்கும் ஆட்சேர்க்கக் கூடிய குறைந்த எண்ணிக்கையிலானவர்களையேனும் ஆட்சேர்க்காமையால், மீளாய்வாண்டின்போது நடாத்தப்பட்ட 09 கற்கை நெறிகளுக்கு மாணாக்கரை வெவ்வேறாக ஆட்சேர்ப்பது 23 முதல் 100 சதவீதம் வரையிலான குறைந்த மட்டத்திலிருந்தது.

(iv) மீளாய்வாண்டின்போது பல்கலைக்கழத்தில் அனுமதிக்கப்பட்ட மாணாக்கர் கற்கை நெறிகளிலிருந்து விலகியிருந்த போக்கு தென்பட்டது. அதற்கமைய, 11 கற்கை நெறிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 342 மாணாக்கரில் 98 பேர் ஆண்டின்போது கற்கை நெறிகளிலிருந்து விலகியிருந்ததுடன், ஒவ்வொரு கற்கை நெறியையும் வெவ்வேறாகக் கருத்திற் கொள்ளுமிடத்து கற்கை நெறிகளிலிருந்து விலகுவோர் சதவீதம் 12 முதல் 67 வரை வியாபித்திருந்தது. இந்நிலையைக் குறைத்துக் கொள்வதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை முகாமைத்துவம் மேற்கொண்டிருக்கவில்லை.

**(இ) டிப்ளோமா கற்கை நெறிகளை நடாத்துதல்**

---

பல்கலைக்கழகம் 2012 முதல் இது வரை நடாத்திய டிப்ளோமா கற்கை நெறிகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பல்கலைக்கழக அனுமதிக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய தகைமைகளை உடைய மத்திய மட்டத்திலான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்குக் கல்விசார் கற்கை நெறிகளை வழங்குவது பல்கலைக்கழகத்தின் நோக்கமானபோதும், துறைசார் நிபுணத்துவ அபிவிருத்திச் செயற்திட்டத்தின் மூலம் நடாத்தப்படும் டிப்ளோமா கற்கை நெறி (National Diploma in Technical Teacher Education) தவிர ஏனைய டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு 2015 ஆம் ஆண்டில் மாணாக்கர் அனுமதிக்கப்பட்டிராததுடன் 2016 ஆம் ஆண்டின் பொருட்டு டிப்ளோமா கற்கை நெறி எவற்றிற்கும் மாணாக்கர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவுமில்லை.

(ii) பல்கலைக்கழகத்தால் 2013 ஆம்ஆண்டு நடாத்தப்பட்ட 05 ஆம் மட்ட டிப்ளோமா கற்கை நெறிகள் 02 ஆகும். இத் தேசிய தொழில்சார் தகைமை (NVQ)களை 2016 ஆம் ஆண்டு இறுதியிலேனும் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையால் கற்கை நெறிகளில் ஈடுபட்ட மாணாக்கருக்குத் தரம் மிக்க கற்கை நெறிகளை வழங்குவதற்குப் பல்கலைக்கழகம் தவறியிருந்தது.

(iii) டிப்ளோமா கற்கை நெறிகளில் சித்தியடைந்த மாணாக்கர் சம்பந்தமான பரிசீலனையின்போது 03 கற்கை நெறிகளைத் தவிர, ஏனைய கற்கை நெறிகளில் சித்தியடையும் சதவீதம் குறைந்த மட்டத்திலிருந்ததுடன், அது 07 முதல் 47 வரையினதாக அமைந்திருந்தது. அக் கற்கை நெறிகளில் சித்தியடையாத மாணாக்கர்களுக்கான பரீட்சைகளை மீண்டும் நடாத்துவதில் நீண்ட தாமதம் நிலவியதுடன், தொடர்ச்சியாகக் கற்கை நெறி நடாத்தப்படாமை இதற்கான காரணமாகும் எனவும் அவதானிக்கப்பட்டது.

**(ஈ) நிபுணத்துவத் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை (SSDP) அமுலாக்குதல்**

---

தொழில்சார் பயிற்சித் துறையின் அபிவிருத்திக்காக அமுலாகும் நிபுணத்துவத் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டின் பொருட்டு பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 10 செயற்பாடுகளது அமுலாக்கத்திற்கு ரூபா 254.2 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தபோதும், அதில் 08 நிறைவேற்றப்படுதற்காகப் பல்கலைக்கழகம் செலவழித்திருந்த தொகை ரூபா 157.4 மில்லியனாகும். இது தொடர்பான கணக்காய்வுப் பரிசோதனையின்போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அரச மற்றும் தனியார் பங்குடைமையுடன் பல்கலைக்கழக் கல்லூரிகளை நிறுவுதல் மற்றும் 5,6 மட்டத்திலான NVQ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் பொருட்டு (Establish private and PPP university colleges to offer demand - driven NVQ 5,6 level training programs) மீளாய்வாண்டின்போது ரூபா 01 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டபோதும், குறித்த பணிகள் நிறைவேறவில்லை.

(ii) பட்டப்பின்படிப்புத் தகைமைகளைப் பெறுவதற்கு பல்கலைக்கழகக் கல்லூரிகளின் பதவியணியினரையும் உள்ளடக்கிய வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகப் பதவியணியின் 17 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 17 மில்லியன் ஒதுக்கப்பட்டபோதும், மீளாய்வாண்டின்போது எந்தவொரு உத்தியோகத்தருக்கும் பட்டப்பின் படிப்புத் தகைமைக்கான நிதி உதவி வழங்கப்பட்டிருக்கவில்லை. அத் தொகையைப் பயன்படுத்தி முன்னைய ஆண்டில் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த 05 உத்தியோத்தர்களுக்கு ரூபா 10.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(iii) தேசிய தொழில்சார் தகைமை (NVQ ) 5க்கென மூன்றாம் நிலை மற்றும் கல்விப் பயிற்சி (NVQ 5 for TVET trainer) வழங்குவதற்தகாக மீளாய்வாண்டின்போது ரூபா 06 மில்லியன் ஒதுக்கப்பட்டபோதும், அதில் ரூபா 4.94 மில்லியன் 2015 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 238 பயிலுநர்களின் பொருட்டே செலவழிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின்போது பயிலுநர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகங்களின் வழிகாட்டலின் கீழ் பாடவிதான அபிவிருத்திக்காக (Develop Curricula with Industry Inputs and Guidance from Reputed Universities) ஏற்பாடு செய்யப்பட்ட தொகை ரூபா 01 மில்லியன் ஆகும். இதில் ரூபா 0.39 மில்லியன் செலவில் முகாமைத்துவப் பட்டப்படிப்புக் கற்கை நெறி மாத்திரமே அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது.

(v) பல்கலைக்கழகக் கல்லூரிகளது கல்விசார் மற்றும் நிர்வாகத் தரத்தை மேற்பார்வையிடும் பொறிமுறையை நிறுவதற்கு (Establish mechanism to monitor academic and administrative quality in university colleges) ஏற்பாடு செய்யப்பட்ட தொகை ரூபா 5.5 மில்லியானகும், இதில் ரூபா 5.496 மில்லியன் செலவிடப்பட்டு பல்கலைக்கழகத்தின் கீழான கல்லூரிகளில் அவ்வாறான முறைமை நிறுவப்படாததால் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறவில்லை. அமைச்சினதும் கல்லூரிகளினதும் வீடியோ மாநாட்டு முறைமைக்கென (Video Conference system) ஆண்டின்போது ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 20 மில்லியன் பயன்படுத்தப்படவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பல்கலைக்கழகத்திற்கென 2015 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட தாபன விதிக் கோவை மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அமுலாக்கப்படுவதற்கான முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாதிருந்தது.

4.3 **செயற்பாட்டு நடவடிக்கைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பட்டப்படிப்புக் கற்கை நெறிக்கான வெளிவாரி விரிவுரையாளர்களை நியமனஞ் செய்தல்**

வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு மேற்கொண்ட செலவினம் தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட தகைமைகளைக் கொண்டிராத கல்விசார் பதவியணியின் 10 உத்தியோகத்தர்களுக்கு 2010 ஆகஸ்ட் 09 முதல் 01 ஆண்டு 09 மாதங்கள், 22 நாட்களுக்கு ஒரே தடவையில் பட்டப்பின் படிப்பு கல்விசார் நடவடிக்கைகளுக்கான வெளிநாட்டுப் புலமைப்பரிசில் வழங்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக, அக்காலப்பகுதியின்போது பல்கலைக்கழகத்தின் கல்விசார் நடவடிக்கைகளுக்கு வெளிவாரி விரிவுரைச் செலவாக 2011, 2012 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 2,799,119 மற்றும் ரூபா 5,210,428 என பல்கலைக்கழகத்தால் மேலதிகமாகச் செலவழிக்கப்பட வேண்டியேற்பட்டது.

(ii) 2013 ஆம் ஆண்டின்போது பேராசிரியர் (பயிலுநர்) பதவிகளுக்கென 17 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவ்வாண்டில் அதி கூடிய வெளிவாரி விரிவுரைச் செலவினமாக ரூபா 8,043,300 வழங்கப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டின் வெளிவாரி விரிவுரைச் செலவினம் 54 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 5,210,428 ஆகியுமிருந்தது.

(iii) மீளாய்வாண்டின்போது பட்டப்படிப்புக் கற்கை நெறிகளுக்கு வெளிவாரி விரிவுரையாளர்களது பங்களிப்பு ஒவ்வொரு பட்டப்படிப்பு கற்கை நெறிக்குமென பரிந்துரைக்கப்பட்ட மொத்த விரிவுரை மணித்தியாலங்களினதும் 55 சதவீதம் ஆகியிருந்தது. ஆண்டின்போது வெளிவாரி விரிவுரையாளர்களது விரிவுரைக் கொடுப்பனவாக ரூபா17,266,578 பல்கலைக்கழகத்தால் செவிடப்பட்டிருந்தது. அது 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் ரூபா 6,874,366 அதிகரிப்பாகும். அதற்கமைய, பல்கலைக்கழகம் நடாத்தும் கற்கை நெறிகளுக்குப் பல்கலைக்கழக கல்விசார் பதவியணியின் பங்களிப்பு குறைந்தபட்சத்தில் அமைந்திருந்தது.

(ஆ) ''இலங்கை பல்கலைக்கழக முறைமையின் கல்விசார் பதவிகளுக்கான நற்பண்பு மற்றும் கல்விசார் பொறுப்பு'' எனும் தலைப்பிடப்பட்ட 2015 மே 07 ஆந் திகதிய UGC/AC/QA/Gen எனும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினது சுற்றறிக்கையின் பிரகாரம், கல்விசார் பதவியணிக்கென பல்கலைக்கழகத்தினுள் நற்பண்பு முறைமையொன்றை அமுலாக்குதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டியபோதும், அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததால் அதன் மூலம் கல்விசார் பதவியணியினரது வினைத்திறனுடன் கூடிய ஆக்கபூர்வமான பங்களிப்பைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் நழுவியிருந்தது.

**(இ) ஆராய்ச்சிகளுக்கான படியை வழங்குதல்**

(i) 2014 பெப்வரி 11 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவத் திணைக்களச் சுற்றறிக்கையின் 4(ii) ஆம் பந்தியின் பிரகாரம் ஆராய்ச்சி அறிக்கைகளில் செயல் முன்னேற்றத்தைக் காட்டியவாறு ஆராய்ச்சி நடவடிக்கை ஆரம்பமாகிய நாள் தொடக்கம் 06 மாதங்களுக்குள் இடைக் கால அறிக்கையொன்றைக் குழுவிடம் சமர்ப்பிக்கவேண்டியபோதும், உத்தியோகத்தர்கள் அவ்வாறு அறிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ii) ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக 2015 மார்ச் முதல் 2016 செப்டெம்பர் வரை ஒரு உத்தியோகத்தருக்கு ஆராய்ச்சிப் படியாக ரூபா 469,523 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தபோதும், 2017 ஆகஸ்ட் 27 ஆந் திகதியளவிலும் மேற்படி சுற்றறிக்கையின் 4(iii) ஆம் பந்தியின் பிரகாரம் இறுதிக் கல்விசார் ஆராய்ச்சி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இந்த உத்தியோகத்தர் 2016 செப்டெம்பர் 13 ஆந் திகதி பல்கலைக்கழகச் சேவையிலிருந்து விலகிச் சென்றிருந்தார்.

**4.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான பணிப்பாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ மனை 2012 நவெம்பர் முதல் மீளாய்வாண்டு முடிவு வரை பயன்படுத்தப்படாது இருந்தது.

**4.5 ஒப்பந்தச் செயற்பாடுகள்**

வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக அனுமதியைப் பெறும் மாணாக்கரது எண்ணிக்கையை அதிகரித்தல், நிறுவனத்தின் சுற்றோட்டத்தை அதிகரித்தல், கற்கைச் சூழலையும் பட்டப்பின்படிப்பை நடாத்தும் நோக்கங்களுடன் ரூபா 150 மில்லியனுக்கான உபகரணங்கள் அடங்கலாக ரூபா 359.9 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிப்பதற்கு ஆலோசிக்கப்பட்ட கற்கை வள அபிவிருத்தி நிலையம் (Learning Resources Development Centre) தொடர்பாக முதன் முறையாக 2011 ஆம் ஆண்டு ரூபா 17.9 மில்லியன் மற்றும் எஞ்சிய தொகை 2012 முதல் 03 ஆண்டுகள் வரையும் வருடாந்த மதிப்பீட்டு நிதியேற்பாட்டுப் பிரகாரம் வழங்கப்படுவதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. நிதி முகாமைத்துவத்துடன் கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்க வேண்டுமென அமப/11/2152/539/017-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் நிர்மாணப் பணிக்கு ரூபா 206.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்தபோதும், அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டிற்கு அதிகமாக ரூபா 75 மில்லியன் கட்டிடத் தொகுதியின் மேலதிக வேலைகளுக்குச் செலவிடப்பட்டதால் அதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்காது 2016 ஆம் ஆண்டின்போது நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படமுடியாது போனது. எவ்வாறாயினும், முறையான திட்டத்துடனும் வினைத்திறனுடனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததால் செயற்திட்ட நடவடிக்கைகள் தாமதமாகின எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**4.6 பதவியணி நிர்வாகம்**

------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவச் சேவைகள் திணைக்கள மேலதிகப் பணிப்பாளர் நாயகத்தின் 2009 யூலை 27 ஆந் திகதிய DMS/E4/47/2/280/1 இலக்கக் கடிதத்திற்கு முரணாக 2012 ஒக்டேபர் 12 ஆந் திகதியன்று வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்திற்குப் பதவியணியினரை இணைத்துக் கொள்கையில், கல்விசார் பதவியணியின் 10 பேருக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விதிமுறைகளின் பிரகாரம் பதவிக்குரிய குறைந்த பட்சத் தகைமைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தும் தனிப்பட்ட ரீதியில் பதவிகள் வழங்கப்பட்டு, அதன் பொருட்டு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாதிருந்தது. அவ்வாறே, அதில் 05 விரிவுரையாளர்களது தகைமைகள் குறிப்பிட்ட பல்கலைக்கழகங்கள் மூலமாக உறுதி செய்யப்பட்டிருக்கவுமில்லை.

(ஆ) பதவி வகிப்பதற்கு தனிப்பட்ட ரீதியில் பொருந்தி வருமாறு சிரேஷ்ட ஆசிரிய உதவியாளராக இணைத்துக் கொள்ளப்பட்ட விரிவுரையாளர் ஒருவர் தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் வெளிநாட்டுப் புலமைப்பரிசிலைப் பெற்று பட்டப்பின்படிப்புக் கற்கை நெறியைக் கற்பதற்காக தாய்லாந்திற்குச் சென்றிருந்தபோதும், குறித்த காலத்தினுள் பட்டப்படிப்பை நிறைவேற்றியிராததுடன், புலமைப்பரிசிலுக்குச் செலவிடப்பட்ட ரூபா 3,876,544 மற்றும் மேலதிகக் கல்விசார் செலவினமாகிய 154,503.43 பாக் (ரூபா 34,170) என்பவற்றை அறவிடுவதற்கு எதுவித நடவடிக்கைகளையும் பல்கலைக்கழகம் மேற்கொள்ளவில்லை.

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கமைய தகைமைகளைப் பூர்த்தி செய்திராதபோதும், பெற்றிருந்த தகைமைகளைக் குறித்த பல்கலைக்கழகத்தின் மூலம் உறுதி செய்யாது, உதவி ஆசிரியர் உத்தியோகத்தர் ஒருவர் 2013 செப்டெம்பர் 01 தொடக்கம் அமுலாகும் பொருட்டு தகவல் தொழில்நுட்பப் பிரிவின் விரிவுரையாளராக (பயிலுநர்) நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஈ) இந்திய பல்கலைக்கழகமொன்றில் 02 ஆண்டு கால பட்டப்பின் படிப்பைப் பூர்த்தி செய்திருந்த விரிவுரையாளரது பட்டம் மற்றும் பெறுபேறுகள் என்பவற்றினது செல்லுபடித் தன்மையை அப்பல்கலைக்கழகத்தின் வாயிலாக உறுதி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) பல்கலைக்கழங்களது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் 5.4(i) ஆம் பந்தியின் பிரகாரம், கல்விசார் தொகுதியைச் சேர்ந்த பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படும்போதும் பதவி உயர்வு வழங்கப்படும்போதும் அவ்விதிமுறைகளுக்கமைய செயற்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், அதற்கு முரணாக கட்டிடச் சேவைத் தொழில்நுட்பம் தொடர்பான தொழில்நுட்பவியல் கற்கை நெறிக்கு பட்டப்பின் படிப்புத் தகைமையைப் பூர்த்தி செய்திராத பெண் விரிவுரையாளர் ஒருவர் 2016 யூன் 01 முதல் விரிவுரையாளர் (பயிலுநர்) பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தார்.

(ஊ) உதவிக் காசாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு விதிமுறையினது 5.4.1 ஆம் பந்தியின் பிரகாரம், நிலவும் வெற்றிடங்களுள் 60 சதவீதமானவை வெளி விண்ணப்பதாரர்கள் மூலம் நிரப்பப்படவேண்டுமாயினும், அதற்கு முரணாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 03 வெற்றிடங்களுக்கு உள்ளக உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(எ) பணிப்பாளரை நியமித்தல் (உட்சேர்த்தல், ஒத்தியல்பு மதிப்பீடு செய்தல், தகுதிச்சான்றளித்தல் என்பன)

---

(i) 2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகப் பணிப்பாளர் (உட்சேர்த்தல், ஒத்தியல்பு மதிப்பீடு செய்தல், தகுதிச்சான்றளித்தல் என்பன) பதவிக்கு நியமனம் மேற்கொள்ளப்படும்போது தெரிவுக் குழுவினரின் சிபார்சுக்கமைய முழு நேர உத்தியோகத்தர் ஒருவரை ஆளுநர் சபை நியமிக்க வேண்டும். எனினும், அதற்கு முரணாக, 2014 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய UNIVOTEC/AC/SAL/112 எனும் இலக்கக் கடிதத்தின் மூலம் 2014 செப்டெம்பர் 01 தொடக்கம் அமுலுக்கு வரும் பொருட்டு 03 ஆண்டுகளுக்குப் பதவி வகிக்குமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் 11 ஆந் தரப் பதவி வகிக்கும் விரிவுரையாளர் ஒருவருக்கு தற்போதைய பதவிக்கு மேலதிமாக பல்கலைக்கழகப் பணிப்பாளர் பதவி வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே, பதவிக்கான ஆட்சேர்ப்பு விதிமுறைகளும் 2016 முடிவிலும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெறாதிருந்தது.

(ii) இலங்கை சனநாயக சோலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 13.1(அ) பிரிவின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் மேலதிக பதவி ஒன்றில் முழு நேர வேலையில் ஈடுபடுவதற்கு அல்லது ஒரு பதவிக்குக் கூடுதலாக பல பதவிகளில் பணியாற்றுவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக பல்கலைக்கழகத்தில் முழு நேர வேலையில் ஈடுபட வேண்டிய விரிவுரையாளர் மற்றும் பணிப்பாளர் ஆகிய 02 பதவிகளும் ஒரு உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அதற்கமைய, விரிவுரையாளரது பதவிக்குரிய சம்பளம், படி என்பவற்றிற்கு மேலதிகமாக பணிப்பாளராகப் பதவியேற்ற 2014 செப்டெம்பர் முதல் அப் பதவிக்குரிய வரப்பிரசாதங்களான வாகனமும் எரிபொருள் படியும் அவருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்வுத் தினமான 2017 ஏப்ரல் வரை அவ்வாறாக ரூபா 942,180 வழங்கப்பட்டுமிருந்தது.

(ஏ) இரத்மலானை பல்கலைக்கழகக் கல்லூரியில் பதில் பணிப்பாளர் ஒருவரை நியமித்தல்

---

(i) தாபன விதிக்கோவையின் 11 ஆம் அத்தியாயத்தினது 13.1.2 மற்றும் 13.4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பதில் கடமையாற்ற நியமிக்கப்படும் உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு விதிமுறையில் குறிப்பிட்டவாறு சகல தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், பணிப்பாளர் பதவிக்குரிய தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திராத II ஆந் தரத்தில் உள்ள விரிவுரையாளர் ஒருவர் 2016 யூலை 15 தொடக்கம் அமுலுக்கு வரும் பொருட்டு கல்லூரியின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு அவருக்குப் பதில் கடமைக்கான சம்பளத்துடன் எரிபொருள் படியுமாக ரூபா 179,100 கல்லூரியால் வழங்கப்பட்டுமிருந்தது

(ii) 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 (VI) ஆம் பந்தியின் பிரகாரம் பதில் கடமைக்கான நியமனமானது குறிப்பிட்டதொரு காலப்பகுதிக்கென வழங்கப்படலாகாது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், 2016 யூலை 14 ஆந் திகதிய UVT/Admin/SAL/111 ஆம் இலக்க நியமனக் கடிதத்தின் பிரகாரம் நிச்சயமற்றதொரு எதிர் காலப்பகுதிக்கான நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் போதியளவு பதவியணியினர் இல்லாதிருந்ததுடன், உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் எழுதுவினைஞர் தரத்திலான 02 உத்தியோகத்தர்கள் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தனர். இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2011 டிசெம்பர் 23 ஆந் திகதிய DMA/ADM/2011/1-26 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மற்றும் நிதிப்பிரமாணங்கள் 133(2) (அ)(i) என்பவற்றில் கவனம் செலுத்தி பல்கலைக்கழகத்தினதும் பல்கலைக்கழகக் கல்லூரியினதும் இலக்கை அடைதல், செயலாற்றல், கணக்கீடு, நிதி மற்றும் செயற்பாட்டுப் பிரிவுகளது உள்ளகக் கட்டுபாட்டை மதிப்பாய்வு செய்தல் போன்ற துறைகளை உள்ளடக்குமாறு உள்ளகக் கணக்காய்வு திட்டமிடப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய 14 கணக்காய்வுத் துறைகளில் 02 இன் பொருட்டு 11 கணக்காய்வு அறிக்கைகள் ஆண்டின்போது வழங்கப்பட்டிருந்தபோதும், அவற்றுள் 05 அறிக்கைகள் ஆளுக்குரிய வேதனத்தைத் தீர்மானிப்பது தொடர்பாக வழங்கப்பட்டனவாகும்.

(ஆ) வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட 06 பல்கலைக்கழகக் கல்லூரிகளது உள்ளகக் கணக்காய்வுப் பணிகளது பொறுப்பு இப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும், கல்லூரிகள் தொடர்ச்சியான கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின்போது அனுராதபுரம் பல்கலைக்கழகக் கல்லூரி மாத்திரமே கணக்காயவு செய்யப்பட்டு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 ஆண்டறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு அறிக்கையுடன் வருடாந்த இறுதிக் கணக்குகளை உள்ளடக்கிய மும்மொழிகளிலுமான ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு நிதியாண்டு முடிவுற்று 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமாயினும், பல்கலைக்கழகத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான கணக்கீட்டு ஆண்டினது ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுபாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | நிதிக்கட்டுப்பாடு | நிபுணத்துவத் துறை அபிவிருத்திச் செயற்திட்ட நிதியம் வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தப்படவில்லை. |
| (ஆ) | களஞ்சியக் கட்டுபாடு | உத்தியோகத்தர்களுப் பொருட்களை வழங்குகையில் முறையான விதிமுறைகள் கடைபிடிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | பதவியணி நிர்வாகம் | உத்தியோகத்தர்களது தகைமைகளைக் குறித்த நிறுவனங்கள், பல்கலைக்கழகங்களின் வாயிலாக உறுதி செய்யாமை, ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை |
| (ஈ) | கற்கை நெறிகளை நடாத்துதல் | உயர் இயலளவுடன் கற்கை நெறிகளை நடத்தாமை மற்றும் விரிவுரையாளர்களது செயலாற்றலை மதிப்பாய்வு செய்யாமை |
| (உ) | உள்ளகக் கட்டுப்பாடு | உத்தியோகத்தர்களுக்கிடையே முறையான வேலைப் பகிர்வு இல்லாமை, வெளிச் செல்லும் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டுப் பேணப்படாமை. |